தினமலர் சென்னை வியாழன் 13-1-2011

# '108' வாகனத்தை அழைப்பவர்கள் எண்ணிக்கை 30 ஆயிரமாக உயர்ந்துள்ளது: முதல்வர் அறிக்கை

சென்னை, ஜன. 13-

'108 ஆம்புலன்ஸ் வாகனத்தை அழைப்பவர்கள் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 30 ஆயிரமாக உயர்ந்துள்ளது' என, முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

அவரது அறிக்கை:

'108 இலவச ஆம்புலன்ஸ்' சேவையினால் பயன்பெறும் மக்கள், அந்த திட்டத்தைப் பற்றி தினமும் மனம் திறந்து பாராட்டுகின்றனர். அந்த திட்டம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதைப் பற்றி, பல ஏடுகளில், பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இத்திட்டம், மத்திய அரசின் உதவியோடு செயல்படுகின்ற திட்டம். இத்திட்டத்தினால் தி.மு.க., அரசுக்கு மிகப் பெரிய பெயர் வருவதை, ஒரு சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இத்திட்டத்தை, 'டிவி'களில் விளம்பரம் செய்த காரணத்தால் தான் 108 வாகனத்தை அழைப்பவர்கள் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 14 ஆயிரம் என்பது, தற்போது 30 ஆயிரம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

'தமிழக போலீஸ் துறையில் மகளிர் கமாண்டோ படை கலைப்பு' என்று, ஒரு செய்தி கொட்டை எழுத்துக்களில் சில பத்திரிகைகளில் வந்துள்ளது. 'நாம் தானே போலீஸ் துறைக்கு அமைச்சர். நாம் எப்போது மகளிர் கமாண்டோ படையைக் கலைத்து கையெழுத்திட்டோம்' என்று விசாரிக்கச் சொன்னேன்.

பெண் கமாண்டோ படைப் பிரிவைக் கலைப்பதற்கான எவ்வித ஆணையும் வெளியிடப்படவில்லை. கமாண்டோ பயிற்சி முடித்த பின், கமாண்டோக்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள், மாநகர, மாவட்ட சேம நலப்படைகளில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். எனவே, பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வெளிவந்த செய்திகள் எல்லாம் உண்மைக்கு மாறானவை.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.